சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.171/2022

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் நாள் வா,சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகேயன் | வயது | 45 |
| த/பெ | சென்னு | வட்டம் | கோயமுத்தூர் தெற்கு |
| விலாசம் | நேதாஜி நகர், நஞ்சுண்டாபுரம்,<br>கோயமுத்தூர் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | புஞ்சை புளியம்பட்டி<br>சார்பதிவாளர் அலுவலக<br>உதவியாளர் |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது புஞ்சை புளியம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்துள்ளது. நீதிமன்ற அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். சார்பதிவாளருக்கு பதிலாக என்னை சாட்சியம் அளிக்க சார்பதிவாளர் அனுமதி அளித்துள்ளார். வா.சா. ஆ 1 ஆவணம் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரி தான். அந்த ஆவண எண்.764/2022 என்றால் சரி தான். அந்த ஆவணம் 02.02.2022 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். அந்த ஆவணத்தின் கடைசி பக்கத்தில் சான்று என்று குறிப்பிட்டு "*கட்டிட களப்பணி மேற்கொள்ளப்பட்டது மதிப்பு சரியாக உள்ளது என சான்று செய்யப்படுகிறது நாள் 02.02.20202"* என்று குறிப்பிட்டு சார்பதிவாளர், புஞ்சை புளியம்பட்டி என கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். அதில் குறிப்பிட்டுள்ள தேதி மற்றும் வருடம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். மாதம் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் கண்ட சொத்தை எந்த தேதியில் களப்பணி செய்யப்பட்டது என்று எங்கள்

ஆவணத்தை பார்த்து சொல்ல முடியுமா என்றால் முடியும். 03.02.2022 அன்று களப்பணி செய்யப்பட்டுள்ளதாக களப்பணி கோப்பிலும் களப்பணி பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களின் படி 03.02.2022 அன்று தான் களப்பணி செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். அந்த ஆவணத்தை பதிவு செய்த போது அந்த ஆவணத்தின் தரப்பினர்களின் அடையாள அட்டைகள், சொத்தின் பட்டா, வரைபடம், வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் ஆகியவற்றை இணைத்துள்ளார்கள் என்றால் சரி தான். வா.சா. ஆ 1ன் 8-வது பக்கத்தில் அசல் ஆவணத்திற்கு மற்றொரு பிரதியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். களப்பணி பதிவேட்டு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். அந்த களப்பணி பதிவேட்டின் உண்மை நகல். ***வா.சா.ஆ. 8. களப்பணி கோப்பு வா.சா.ஆ .9. வா.சா. ஆ 1 க்கு சரியான சார்பதிவாளர் அலுவலக ஆவணம் வா.சா.ஆ. 10.*** தேதி மற்றும் வருடம் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது எழுத்து பிழை என்றால் சரி தான். வா.சா.ஆ 1 ஆவணம் மொத்தம் எத்தனை பக்கங்களை கொண்டது என்றால் 47 பக்கங்களை கொண்டது.

( 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.